[1979 மார்ச் 27

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் ரகோத்தமன் அவர்கள் அங்கே இருக்கக் கூடிய விவசாயிகளின் சங்கடத்தைப் பற்றி பல முறை நேர்முகமாகவும், மனுக்கள் மூலமாகவும், முறையிட்டிருக்கிறார். அந்த முறையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுடைய எண்ணங்களைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர் ரகோத்தமன் அவர்கள் நல்ல முறையிலே எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். இதையெல்லாம் எண்ணிப் பார்த்து அரசு, ஜனவரி மாதம் வசூல் பண்ணுவதை ஏப்ரல் மாதம் வரை கால தாமதமாக வசூலிப்பதற்குத் தற்காலிகமாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது ஆகவே, இரண்டு மாதங்களுக்கு வசூல் செய்வதை இந்த அரசு தள்ளிப்போட்டிருக்கிறது. இப்போது வசூல் செய்வது கடுமையாக்கப் படவில்லை என்பதையும், மக்களுடைய எண்ணத் தையும், உறுப்பினர் ரகோத்தமன் அவர்கள் எண்ணமும் நிறைவேற்றப்படும் என்பதற்கு உறுதி அளிக்கிறேன்.

மேலா நல்லூரில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடுகள்.

குறுகிய கால வினா எண். 28—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாயூரம் ஒன்றியம் (மேலாதனூர்) மேலாநல்லூர் பஞ் சாயத்தில் நந்தனார் பிறந்த இடம் என்ற வகையில் அவர் வாழ்ந்த பகுதியில் அங்குள்ள தாழ்த்தப்பட்டவர்கள் 27 குடும் பத்தினருக்கு அரசு இலவச வீடுகள் கட்டித் தந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அந்தக் கட்டிட வேலைகள் முழுவதும் முடிவு பெற்றுவிட்டதா ?

(இ) முடிவு பெறவில்லை என்றால் அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் :

(அ) மாயூரம் ஒன்றியம் (மேலாதனூர்) மேலாநல்லூர் பஞ் சாயத்தில் நந்தனார் பிறந்த இடம் என்ற வகையில் அவர் வாழ்ந்த பகுதியில் அங்குள்ள தாழ்த்தப்பட்டவர்கள் 27 குடும் பத்தினருக்கு அரசு இலவச வீடுகள் கட்டித்தரவில்லை.

(ஆ) மற்றும் (இ) : கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ''எந்நன்றி கொன் றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு'' என்பதற்கேற்ப இந்தக் கேள்வியை தாங்கள் அனுமதித்து, இஅ

[1979 மார்ச் 27]

REPORTING SECTION

அவையிலே வந்ததற்காக நன்றி தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சரவர்களிடம் சில துணைக் கேள்விகள் கேட்க தாங்கள் அனுமதிக்க கோருகிறேன். மேலாநல்லூர் என்று தற்போது அழைக்கப்படுகின்ற நந்தனார் பிறந்த அந்த பஞ்சாயத்துப் பகுதியில், நந்தனார் பிறந்த தெருவில் 27 பேர்களுக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு வீடு கட்டித்தர ஏற்பாடு செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். எப்போது ஏற்பாடு செய்யப்பட்டது? அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன? இடையிலே நிறுத்தப்பட்டதா? அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, 1973 ஆம் ஆண்டு இந்த வீடு கட்டும் பணி தொடங்கப்பட்டது. அவை இலவச வீடுகள் அல்ல. அப்போது மானியத் திட்டத்தின்கீழ் 1,200 ரூபாய் கடனாகவும், 400 ரூபாய் மானியமாகவும் வழங்குவதற்கு அப்போதிருந்த அரசு ஒப்புதல் அளித்து, வீடு கட்டும் பணி நடைபெற்றது. ஒரு ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் கொடுத்த பணம் பூராவையும் செலவழித்துவிட்டு, மீதிபணம் இல்லை என்ற காரணத்தால் கட்டவில்லை. அதோடு அந்த பகுதி மக்கள் அளித்த வாக்குறுதிக்கு ஏற்ப தகுந்த ஒத்துழைப்பு தரவில்லை. ஒப்பந்தக்காரரும் வசதியான கான்ட்ராக்டர் அல்ல. ஆகவே, வீடுகள் கட்டி முடிக்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குறிப்பாக நந்தனார் பிறந்த ஊரில் இலவச மாக அரசு வீடு கட்டித் தர முன்வரவில்லை, சென்ற அரசு காலத்தில், என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் அப்படிச் செய்யாமல் இருந்தாலும்—1,200 ரூபாயோ அல்லது 1,500 ரூபாயோ என்று அறிவிக்கப்பட்டது—இந்த அரசு அதற்கு மானியத் தொகை வழங்கி, வீடுகளைக் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யுமா? தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று இந்த அரசு அறிந்து இருக்கிற காரணத்தால், அந்தப் பகுதியிலே உள்ள தாழ்த்தப்பட்டோர் மிகவும் அதிக அளவில் பாதிக்கப்பட்ட மக்களாக இருப்பதால் அதைச் செய்ய முன் வருவார்களா? ஒப்பந்தக்காரர் ஒன்றும் செய்ய முடியாமல் அவருடைய சொந்த ஊரான தஞ்சாவூருக்கு ஓடிவிட்டார். எனவே இந்த புதிய அரசு டாக்டர் கலைஞர் அவர்கள் தில்லையாடி வள்ளியம்மை நகரை உருவாக்கியதைப் போல, நந்தனார் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆற்றிய அரும் பணிக்காக, அவருடைய நினைவாக 'நந்தனார் நகர்' என்று ஒரு புதிய நகரை உருவாக்கி, அந்த 27 வீடுகளை மட்டுமல்ல; இன்னும் அதிகமாக வீடுகளை அங்கே கட்டிக் கொடுக்க முன்வந்து, சுற்றுலாப் பயணம் வரக்கூடிய மக்கள் எல்லாம் அந்த நந்தனார் நகரைக் காண வருகின்ற வகையில் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

[1979 மார்ச் 27

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஒப்பந்தக்காரர் தஞ்சாவூர்க்காரர், ஆகவே, தஞ்சாவூருக்கு ஓடிவிட்டார் என்று சொன்னார்கள். ஒருவேளை தஞ்சாவூர்க்காரர்களே கொடுத்த ஒப்பந்தத்தைச் செய்து முடிக்காமல் ஓடிவிடுவார்களோ என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இந்த நந்தனார் காலனியைப்பற்றி என்னுடைய கவனத்திற்கு கொண்டுவந்த உடனே அந்த வீடுகளை எப்படியாவது கட்டி முடிக்க வேண்டுமென்று முடிவுசெய்து நடப்பாண்டில் கட்டுகின்ற பணி தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சாவூர் ஒப்பந்தக்காரர்களைப்பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டுமல்ல; எல்லா மாவட்டங்களிலும் சிலர் இப்படியும் இருப்பார்கள், அப்படியும் இருப்பார்கள். ஏனென்றால் நமது மாண்புமிகு ஆளும்கட்சி கொறடா அவர்கள் கூட தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான். அவருக்குக்கூட வருத்தம் ஏற்படக் கூடும். நான் அந்த அடிப்படையில் கூறவில்லை. எப்படியாவது நந்தனார் பிறந்த ஊரிலே, நந்தனார் பிறந்த தெருவிலே ஒரு சிறப்பான நகராக அதை அமைக்க வேண்டுமென்பதற்காக மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நீண்டகாலத்திற்கு முன்னால் தொடங்கப்பட்ட அந்தப் பணி தொடருவது மட்டுமல்ல; சிறப்பான முறையில் அமைக்கப்பட்டு நந்தனார் நகர் என்ற பெயரால் நடக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? ஓராண்டுக்குள் தொடங்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்னும் இரண்டாண்டு..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேள்வியோடு நிறுத்திக் கொள்ளுங்கள் ; அதற்குமேல் வேண்டாம்.

(பிற்பகல் 9-10)

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது தஞ்சாவூர் ஒப்பந்தக்காரர்கள் ஓடிவிடுவார்கள் என்று குறிப்பிட்டார். நானும் தஞ்சாவூர்க்காரர்தான். ஆகவே அவர் அவ்வாறு குறிப்பிட்டதை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தான் அவ்வாறு குறிப்பிட்டார். நான் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் சொன்னதுபோல் நடப்பாண்டில் இந்த அரசு, இவ்வளவு நாட்கள் தாமதமான அந்த வீட்டை எடுத்துக் கட்டி முடிப்பதற்குரிய தகுந்த ஆணையிட இருக்கிறது என்பதை அவருக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.